# DEPOSITION OF WITNESS

*( XXIII Code of Criminal Procedure)*

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, SIVAGANGAI.**

**Prosecution:**PW.2 **Deposition of witness for }**
**Defence:**

**Case No.** Sessions Case No.**SC 121-2015**

| | | | |
|---|---|---|---|
| **Name** | வாச்சாரக்காளை | **S/o.** | சிங்கமுத்து |
| **Village** | சித்தலூர் | **Taluk** | சிவகங்கை |
| **Religion** | இந்து | **Calling** | அ.சா.2 |
| **Date** | 12-08-2022 | **Age** | 37/2022 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X 1872 of the day 12.08.2022.**

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக நான் பாரதி நகரில் தான் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். நான் பி.இ. மெக்கானிக்கல் இன்ஞினியரிங் படித்துள்ளேன். எனக்கு கார் டிரைவிங் லைசன்ஸ் இருக்கிறது. சம்பவத்தன்று முத்துக்குமார் எங்கள் வாகனத்தை ஓட்டினார் என்றால் எனக்கு குத்துப்பட்டதால் அன்று முத்துக்குமார் தான் வாகனத்தை ஓட்டினார். முத்துக்குமார் எனது மாமா மகன். அவர் ஊர் சித்தலூர் ஆகும். ரூபா என்பவருக்கு பூஜை செய்வதற்கு எனது வீட்டிலிருந்து 11.00 மணி போல் கிளம்பினோம். மாலை, பூஜை சாமான்கள் அனைத்தும் வாங்கினோம். 200 அல்லது 300 ரூபாயிக்கு வாங்கியிருப்போம். சாட்சி மீண்டும் எனது தகப்பனார் வாங்கி வந்தார் என்று சொல்கிறார். எனக்கு ரூபா பிறந்த தேதி எனக்கு தெரியாது, இறந்த தேதி 31.07.2012. ரூபா என்பவர் எந்த ஊரில் இருக்கும் போது இறந்தார், என்ன காரணத்தினால் இறந்தார் என்பதற்கு

எந்த ஆவணமும் இல்லை. 2012ல் நான், என் குடும்பத்தார்கள் அனைவரும் பாரதி நகரில் தான் இருந்தோம். பாரதி நகரிலிருந்து சித்தலூருக்கு 12 கி.மீ இருக்கும். சித்தலூருக்கு வெளியிலிருந்து ஊருக்குள் வரும் பாதை வடக்கிலிருந்து தெற்காக இருக்கும் என்றால் சரிதான். அந்த சாலை இரண்டு புறமாக பிரிந்து வலதுபுறம் உப்பாறுக்கும் இடதுபுறம் ஊருக்கும் வரும். அவ்வாறு பிரியும் இடத்தில் மேற்குப்புறம் ஆற்றுப் படுகைக்கும் இடது கைப்புறம் கிழக்காக ஊருக்குள் வரும் சாலையும் அமைந்துள்ளது என்றால் சரிதான். அந்த இடத்தில் பள்ளி வடக்கு முகம் பார்த்து உள்ளது என்றால் சரிதான். சித்தலூரில் குறைந்தது 100 வீடுகள் உண்டு என்றால் சரிதான். ஊருக்குள் நுழைந்தவுடன் வடக்கே கண்மாய் உள்ளது. அந்த கண்மாயை ஒட்டி கிழமேலாக ஊருக்குள் செல்லும் பாதை அமைந்துள்ளது. 1வது எதிரி மகாதேவனுக்கு கண்மாயின் தெற்கு கரையில் வீடு உள்ளது என்றால் எங்களுக்கு தான் வீடு உள்ளது. எனக்கு சித்தலூரில் எனது பெயரிலோ, அல்லது எங்கள் குடும்பத்தரின் யார் பெயரிலாவது வீடு உள்ளது என்று காட்டக்கூடிய ஆவணம் எதுவும் காவல் துறையினர் விசாரிக்கும் போது கொடுத்தீர்களா என்றால் இல்லை. எங்கள் குடும்பத்தார்கள் வசித்து வந்தார்கள் என்பதை காட்டக் கூடிய ஆவணங்களான வழங்கல் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை மற்றும் ஆதார் அடையாள அட்டை போன்றவற்றை கொடுக்கவில்லை. நான் போகும் போது மகாதேவனின் இடிந்த வீட்டினை எடுத்து புதிதாக கட்டிக்கொண்டிருந்தார்கள் என்றால் அவ்வாறு எதுவும் கட்டவில்லை. நான் பிறந்ததிலிருந்து 1வது எதிரி மகாதேவனின் வீடு அதே இடத்தில் தான் இருக்கிறது. கண்மாய் கரையில் எங்கள் வீடு உள்ளது எங்கள் வீட்டிற்கு எதிர்த்தாற்போல் மகாதேவன் வீடு உள்ளது. நான் சொல்வது போல் எங்களுக்கு வீடு இல்லை என்றும் அதனால் தான் வீடு இருப்பதாக இவ்வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் வீடு பற்றிய ஆவணங்கள்

எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. சித்தலூரில் உள்ள முத்துக்கருப்பன் எனது அக்காவின் கணவர், அவருடைய உறவினர்கள் பாண்டி மகன் ஐயப்பன், பாண்டி மகன் சதீஸ் ஆகியோர்கள் சேர்ந்து மகாதேவனின் வீட்டை இடித்துவிட்டதாக ஏற்கனவே அவர்கள் பெயரில் கிரிமினல் வழக்கு சிவகங்கை தாலுகா காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டு குற்ற எண்.109/2011ல் நடைபெற்று வருகிறது என்றால் எனக்கு அது குறித்து தெரியாது. என் தகப்பனார் சிங்கமுத்து பிறந்த ஊர் சித்தலூர். எங்களது ரேஷன் கார்டு, ஆதார் கார்டு போன்றவை சித்தலூரில் தான் உள்ளது. நான் 20 வருடமாக சிவகங்கை பாரதி நகரில் குடியிருந்து கொண்டு சித்தலூரில் ரேஸன் வாங்கிக் கொண்டிருக்கிறோம். என்னுடைய வழங்கல் அட்டையை பார்த்தால் சித்தலூரில் எங்கள் வீடு எங்கிருக்கிறது அதில் முகவரியை பார்த்தால் தெரிய வரும். சித்தலூரில் எங்களுக்கு வீடு இருந்தால் அது குறித்து பட்டா வழங்கப்பட்டிருக்கும் என்றால் அது குறித்து என் தகப்பனாருக்கு தான் தெரியும். சம்பவத் தேதியன்று சிவகங்கை பாரதி நகரிலிருந்து கிளம்பி தான் சித்தலூருக்கு வந்தோம். பாரதி நகரிலிருந்து சித்தலூர் வரை நான் ஓட்டி வந்தேன் அதன் பிறகு சம்பவத்திற்கு பிறகு வாகனத்தை யார் ஓட்டினார் என்று எனக்கு தெரியாது. என்னை சிகிச்சைக்கு சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அப்போது நேரம் பகல் 12.00 மணியிருக்கும். எனக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் என்னை விசாரித்தாரா என்றால் மருத்துவர் என்னை விசாரித்தார். சிவகங்கை அரசு மருத்துவமனையில் 20 அல்லது 25 நிமிடம் இருந்தேன். பின்பு அங்கிருந்து மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு சரியாக பார்க்கவில்லை என்பதால் மீனாட்சி மிஷன் மருத்துவமனைக்கு சென்றேன். சிவகங்கை அரசு மருத்துவமனையிலிருந்து மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனைக்கு செல்லச் சொல்லி எனக்கு எழுதிக்

கொடுத்தார்கள். மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனை வாசல் வரை சென்றுவிட்டு திரும்ப வந்துவிட்டோம். மீனாட்சி மிஷன் மருத்தவமனையில் எனக்கு எப்படி காயம் ஏற்பட்டது, எங்கு ஏற்பட்டது, யாரால் ஏற்பட்டது, எந்த ஆயுதத்தால் என்ற விபரங்களை கேட்டு எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். எங்கள் ஊரில் எங்கள் சொந்தக்காரர்கள் 10 பேர்கள் இருப்பார்கள். எங்கள் ஊரில் எங்கள் உறவினர்களை தவிர ஒரு 100 பேர்கள் இருப்பார்கள். என் மாமா முத்துக்குமாரின் வீடு என் வீடு என்று சொல்லும் வீட்டிலிருந்து 50 வீடுகள் தள்ளியிருக்கும். எங்கள் வீட்டிலிருந்து ஒரே தெருவில் சென்றால் அவர்கள் வீட்டிற்கு சென்று விடலாம். அன்று எங்கள் ஊரில் உள்ள பள்ளி நடந்துக்கொண்டு தான் இருந்தது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து பள்ளி 100 அடி தூரம் இருக்கும் என்றால் 200 அல்லது 300 அடி தூரம் இருக்கும். அந்த பள்ளியின் வாசலின் அருகில் பேருந்து நிறுத்தம் உள்ளது என்றால் சரிதான். அங்கு 20 நிமிடத்திற்கு பஸ் வசதி உள்ளது என்றால் தவறு 3 மணி நேரத்திற்கு ஒரு முறை தான் பஸ் வசதி உள்ளது. பள்ளி வாசல் வழியாக எங்கள் ஊருக்குள் வரும் தெருவில் எப்போதும் ஆள் நடமாட்டம் இருக்கும் என்றால் ஆள் நடமாட்டம் கம்மியாக தான் இருக்கும் ஏனென்றால் ஊரில் உள்ளவர்கள் நெய் வியாபாரத்திற்கு சென்றுவிடுவார்கள். நாங்கள் என் சகோதரி ரூபா இறந்தது சம்மந்தமாக சம்பவத் தினத்தன்று சித்தலூர் செல்வது ஊரில் உள்ள அனைவருக்கும் தெரியும். ஊர் மக்கள் இல்லை என்பதால் அன்று யாரும் வரவில்லை. எனது பாட்டி மீனாட்சி சித்தலூரில் தான் குடியிருக்கிறார் என்று சொல்லக்கூடிய ஆவணம் ஏதாவது இருக்கிறதா என்றால் அவர்களிடம் தான் கேட்கவேண்டும். நான், எனது தகப்பனார் சிங்கமுத்து, தாயார் முத்துராமு, அம்மாச்சி மீனாட்சியம்மாள், சகோதர சகோதரிகள் அனைவரும் சித்தலூரில் இருந்ததில்லை பாரதி நகரில் தான் இருந்து வருகிறோம் என்றால் சரியல்ல. 1வது

எதிரி மகாதேவனின் வீட்டை எனது மாமா முத்துக்கருப்பன் அடித்து நொறுக்கிய நிலையில் 1வது எதிரி மீண்டும் எடுத்து கட்டிக்கொண்டிருந்ததால் அவர்கள் மீது எங்களுக்கு கோபம் என்றால் சரியல்ல. எனக்கு எனது அப்பா சிங்கமுத்து பிறந்த ஊரில் சொந்தமாக ஒரு வீடு வேண்டுமென்று எனது மாமா முத்துக்கருப்பன் சொல்லியிருந்ததை போல வீடு வாங்க வேண்டுமென்ற எண்ணம் இருந்தது என்றும் 1வது எதிரி மகாதேவனின் வீட்டை பொரம்போக்கு நிலத்தில் இருந்ததால் அதை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நானும் எனது சகோதரர் முருகேஷ்வரனும் சென்றோம் என்றாலும் இது பற்றிய அறியாத தாயார் எங்களுடன் வந்திருந்தார் என்றால் சரியல்ல. நான் சொல்லும் அந்த வீடு கண்மாய் கரையிலிருந்து 50 அடி தூரத்தில் இருக்கும். கண்மாய் கரையிலிருக்கும் வீட்டை ஆக்கிரமிக்கும் நோக்கோடு தான் அங்கு சென்றேன் என்றால் சரியல்ல. அங்கு நான் செல்லும் போது 1வது எதிரி கொத்தனார், சித்தாள் வேலை செய்து கொண்டிருந்தார்கள் என்றால் சரியல்ல. அங்கு சென்று அவர்கள் வீட்டில் வாசலில் மோதுவது போல் வாகனத்தை நிறுத்திவிட்டு அங்கு வேலை செய்து கொண்டிருந்தவர்களுடன் தள்ளுமுள்ளு தகராறு செய்தோம் என்றால் சரியல்ல. அவ்வாறு தள்ளுமுள்ளு நடக்கும்போது 1வது எதிரியின் வீட்டின் வாசலில் இடிந்த நிலையில் உள்ள வாசல் கம்பி கிராதி வாசல் இருந்த வேல் கூர்முனையில் விழுந்து என் சகோதரனுக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நாங்கள் செய்வதை எதிர்ப்பாராத எனது தாயார் இறங்கி எங்களை தடுக்க முற்பட்ட போது தான் அந்த தள்ளு முள்ளுவில் எங்களால் தள்ளப்பட்டு அவர் கம்பி கிராதியில் கதவில் விழுந்து அவருக்கு காயங்கள் ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேற்சொன்ன சம்பவம் 3 நிமிடங்களிலிருந்து 5 நிமிடங்ளுக்குள் நடந்து முடிந்திருக்கும். அவ்வாறு ஒரு சம்பவம் நடக்கும்போது வேறு சிலர் சம்பவயிடத்திற்கு எங்களை காப்பாற்றுவதற்கு வந்தார்கள். அவர்கள்

யாரென்று எங்களுக்கு தெரியாது. அவ்வாறு வேறு சிலர் வந்ததை போலீசார் விசாரணையில் நான் சொல்லவில்லை. மீனாட்சி மிஷன் மருத்துவமனைக்கு என்னை அழைத்து செல்லும் போது சுமாரான தெளிவுடன் இருந்தேன். நான் மருத்துவரிடம் சம்பவத்தை பற்றி விபரம் சொல்லும்போது பகல் 12.30 மணிக்கு பாரதி நகரில் நடந்ததாக தகவல் சொல்லியுள்ளேன் என்றாலும் இந்த சித்தலூரில் நடந்ததாக உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் என்னை எதிரிகள் என்னை தாக்கி அதனால் எனக்கு காயங்கள் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் அத்துமீறி எதிரி வீட்டிற்குள் நுழைந்து தாக்க முற்பட்ட நிலையில் எங்கள் தரப்பினருக்கு காயங்கள் ஏற்பட்டதால் பழியை எதிரிகள் மீது போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. எதற்காக பாரதி நகரிலிருந்து 12 கி.மீ தள்ளி உள்ள சித்தலூருக்கு சம்பவ நேரத்தில் சென்றோம் என்பதை ஜோடிப்பதற்காக தான் எனது அக்கா ரூபாவின் நினைவு நாளை அனுசரிக்க சித்தலூருக்கு சென்றோம் என்று சொன்னால் சரியல்ல. முதல் விசாரணையின் போது ரூபா எனக்கு 3வது அக்கா என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் இறந்து போன ரூபா எனது தங்கை என்றும் அவர் நினைவு நாள் சித்தலூருக்கு சென்றோம் என்று சொல்லியுள்ளோம் என்றால் அது தவறு அவர்கள் தவறாக எழுதியிருக்கிறார்கள். நான் சொல்வது போல் ரூபா என்ற பெயரில் அக்காவோ, தங்கையோ யாரும் கிடையாது என்றாலும் குற்றமுறு எண்ணத்துடன் நாங்கள் சென்றுவிட்டு அதை மறைப்பதற்கு நினைவு நாளுக்கு சென்றதாக பொய்யாக கூறுகிறோம் என்று சொன்னால் சரியல்ல. நான் செர்வது போல் சம்பவயிடத்தில் 1வது எதிரியை தவிர வேறு யாரும் இல்லை என்றாலும் கொத்தனார் மற்றும் சித்தாள் தவிர அந்த குடும்பத்தை சேர்ந்தவர்கள் யவரும் சம்பவயிடத்தில் இல்லை என்றாலும் வழக்கிற்காக 1வது எதிரியின்

குடும்பத்தை சார்ந்தவர்களை எல்லோரையும் இந்த வழக்கில் சேர்ந்து பொய்யாக குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அன்று சாமி கும்பிட போவதாக சொல்லும்போது எனது அப்பா அங்கு வரவில்லை. நாங்கள் வாங்கி சென்ற பொருட்கள் அனைத்தும் காருக்குள்ளேயே கிடந்தது. எனது சகோதரன் முருகேஸ்வரன் எல்லாப் பொருட்களும் சம்பவயிடத்தில் சிதறி கிடந்தது சொல்லியிருந்தால் அது உண்மையா என்றால் அல்லது நான் சொல்வது உண்மையா என்றால் அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. நாங்கள் பூஜை சாமான்கள் எதுவும் வாங்கி செல்லவில்லை என்றாலும் ஆயுதங்களுடன் 1வது எதிரி மிரட்டுவதற்காக சென்றீர்கள் என்றால் சரியல்ல. அங்கு நாங்கள் எதிர்பாராத சம்பவம் நடந்துவிட்டதால் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி எதிரிகள் மீது பொய்யாக புகார் அளித்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

R.சத்யதாரா M.A., M.L., 12.08.2022
கூடுதல் மாவட்ட நீதிபதி,
சிவகங்கை

// உண்மை நகல்//

# DEPOSITION OF WITNESS

*( XXIII Code of Criminal Procedure)*

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, SIVAGANGAI.**

**Prosecution:**PW.3 **Deposition of witness for }**
**Defence:**

**Case No.** Sessions Case No.**SC- 121-2015**

| **Name** | தீபா | **H/o.** | ரவிச்சந்திரன் |
|---|---|---|---|
| **Village** | சிவகங்கை | **Taluk** | சிவகங்கை |
| **Religion** | இந்து | **Calling** | அ.சா.3 |
| **Date** | 12-08-2022 | **Age** | 37/2022 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X 1872 of the day 12.08.2022.**

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:

எனது கணவரின் சொந்த ஊர் ஆவாரங்காடு. ஆவாரங்காடு சித்தலூரிலிருந்து எவ்வளவு தூரம் என்று எனக்கு தெரியாது. ஆவாரங்காடு மதுரையிலிருந்து மானாமதுரை செல்லும் பிரதான சாலையில் உள்ள ஊராகும். எனது கணவர் விவசாய வேலை செய்கிறார். என் வீட்டுக்காரருக்கு விவசாயம் ஆவாரங்காட்டில் தான் உள்ளது. ஆனால் நாங்கள் சிவகங்கை காளவாசல் பகுதியில் தான் குடியிருக்கிறோம். சம்பவத்திற்கு பிறகு டாடா சுமோ வாகனத்தை எனது மாமன் மகன் முத்துக்குமார் ஓட்டிக்கொண்டு சிவகங்கை பெரிய ஆஸ்பத்திரிக்கு அழைத்து வந்தார். சம்பவ சமயத்தில் நாங்கள் போட்ட சத்தத்தின் காரணமாக முத்துக்குமார் சம்பயிடத்திற்கு வந்தார். அவரை தவிர மாரிமுத்து, முத்தக்கருப்பன், லதா ஆகியோர் சம்பவயிடத்திற்கு வந்தார்கள். அந்த ஊரில் 500 குடும்பங்கள் இருக்கும். எல்லா வீடுகளும் பக்கத்தில் பக்கத்தில் இருக்கிறது,

தள்ளியும் இருக்கிறது. சம்பவம் நடந்த இடத்தை சுற்றி ஒரு 20 வீடுகள் நெறுக்கமாக தான் உள்ளன. நாங்கள் செல்லும் போது எங்கள் ஊரில் வேறு யாரும் இல்லை. 100 வேலை திட்டத்தில் சென்றவர்கள் எத்தனை மணிக்கு வேலை முடித்து வருவார்கள் என்று எனக்கு தெரியாது. நாங்கள் கொண்டு சென்ற பூஜை பொருள் சாமான்களான மாலை, பழம், தேங்காய் போன்றவைகள் என் தாயாரின் கையில் வைத்துக்கொண்டு கீழே இறங்கியதால் அங்கேயே கீழே சிதறிவிட்டன. அன்று எனக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை. அன்று என் தகப்பனார் எங்களுடன் வரவில்லை, சிவகங்கையில் தான் இருந்தார். எனது வீட்டுக்காரர் ரவிச்சந்திரனும் வரவில்லை. சிவகங்கையில் உள்ள பெரிய ஆஸ்பத்திரிக்கு நான் எனது சகோதரருடன் செல்லவில்லை. சம்பவயிடத்திலேயே என் தாயார் உடல் உடன் இருந்துவிட்டேன். நான் மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனைக்கு செல்லவில்லை. நான் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றாலும் இந்த வழக்கிற்காக நானும் உடன் சென்றதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எனக்கு ரூபா என்ற பெயரில் சகோதரி இல்லை என்றாலும் இந்த வழக்கிற்காக சகோதரர்கள் சொல்லிக் கொடுத்து பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

R.சத்யதாரா M.A., M.L., 12.08.2022
கூடுதல் மாவட்ட நீதிபதி,
சிவகங்கை

// உண்மை நகல்//

# DEPOSITION OF WITNESS

*( XXIII Code of Criminal Procedure)*

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, SIVAGANGAI.**

**Prosecution:**PW.2 **Deposition of witness for }**
**Defence:**

**Case No.** Sessions Case No.**SC 45-2019**

| | | | |
|---|---|---|---|
| **Name** | கலைவாணி | **H/o.** | வடிவேல் |
| **Village** | காரைக்குடி | **Taluk** | காரைக்குடி |
| **Religion** | இந்து | **Calling** | அ.சா.2 |
| **Date** | 12-08-2022 | **Age** | 40/2022 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X 1872 of the day 12.08.2022.**

**முதல் விசாரணை:**

நான் காரைக்குடி அய்யனார் தெருவில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. கடந்த 10.10.2017ம் தேதி மதியம் 02.00 மணியளவில் எனது மாமியார் பழனியாயி எனது வீட்டில் சாப்பிட்டுவிட்டு 02.15 மணியளவில் அவரது பெரிய மகன் வீட்டிற்கு நடந்து சென்றார். சிறிது நேரம் கழித்து கூகூவென சத்தம் கேட்டது. நான் சென்று பார்த்தேன். அப்போது எனது மாமியாரை யாரோ பிடித்து தள்ளி சங்கிலியை அறுத்துச் சென்று விட்டதாக கூறினார். சதீஷ் என்பவரும் ஹரி என்பவரும் வண்டியில் எதிரிகளை துரத்திச் சென்று பிடிக்கப் போயிருப்பதாக எனது மாமியார் சொன்னார். சிறிது நேரத்தில் பாஸ்கர் என்பவருக்கு அவர் மகன் சதீஸ் போன் செய்தார். தாங்கள் எதிரியை துரத்தி சென்று பிடிக்கும் போது சதீஸ் இரண்டு கைகளிலும் எதிரிகள் கத்தியால் குத்திவிட்டு தப்பித்து சென்று விட்டதாக சொன்னார்கள். காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு சென்று நானும் எனது மாமியாரும் காயம்பட்ட சதீஸை பார்த்தோம். அதன் பிறகு

காரைக்குடியில் உள்ள காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தோம். அந்த புகாரை நான் தான் எழுதினேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு தான் காவல் நிலையத்தில் கொடுத்ததாகும். அதை நான் தான் எழுதினேன். அதில் எனது மாமியார் கைரேகை வைத்துள்ளார். நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன். அந்த புகார் மனு ஏற்கனவே அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள் நடந்ததை சொன்னேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:** இல்லை.

**R.சத்யதாரா M.A., M.L., 12.08.2022**
**கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**சிவகங்கை**

**// உண்மை நகல்//**